கீடு) இல்லை; நீங்கள் திடீரென்று இப்போது வந்தீர்கள். 11 மணிக்குத்தான் அவைக்கு வந்தீர்கள். வந்ததும் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் கிளப்புகிற பிரச்சினை, மிக இன்றியமையாத பிரச்சினைதான்., அதை நாளை எழுத்து மூலம் எனக்குக் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை; அவையில் அரசுத் தரப்பில் அதற்குரிய பதில் சொல்வதற்குரிய வாய்ப்பும் வழங்க வேண்டும், அப்போது தான் சரியாக இருக்கும். அதை நாளைக்குக் கொடுங்கள் (குறுக்கீடு) நாளை அவை இல்லை ; அடுத்த திங்கட்கிழமை நீங்கள் எழுத்து மூலம் கொடுங்கள். (குறுக்கீடு) அதற்கு ஏதாவது சரியான பரிகாரம் ஏற்பட வேண்டும். இப்படியே போகிற போக்கில் பேசிக் கொண்டே நாம் இவ்வளவு காலம் இருக்கிற காரணத்தினாலேதான், இதற்கு சரியான பரிகாரம் நாம் எடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறோம். உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்கு எழுத்துமூலம் கொடுங்கள்; அதை திங்கட்கிழமை உரிய வகையில் எடுக்கலாம். உட்காருங்கள்.

5. தகவல் கோரல்

கள்ளக்குறிச்சியில் அம்பேத்கார் சிலை உடைப்பு குறித்து.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், சொல்லி விடுகிறேன். கள்ளக்குறிச்சியில் அம்பேத்கார் சிலை உடைப்பு சம்பந்தமாக ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தப் பிரச்சினையில் ஓரளவு இனக் கலவரமும் ஏற்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் நேற்று நடத்திய பீஸ் கமிட்டியை ஒரு வகுப்பினர் புறக்கணித்த காரணத்தினால், இன்று வருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; இந்த பீஸ் கமிட்டி பின்னர் முழு விவரம் தருவதாக, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில் இப்பொது இதை எழுப்ப வேண்டாம். இன்று முழு தகவலும் வந்ததற்குப் பிறகு, அடுத்து அவை திங்கட்கிழமை கூடுகிறபோது, உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன். திரு. இளம்வழுதி உங்களுக்கு, நான் வாய்ப்பு வழங்கியிருக்கிறேன். திங்கட்கிழமை கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. இப்போது

தானே சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் ?

திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே மாத்திரம் ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் மக்கள் இந்தியைத் தனியாகப் படித்து, பிராத்தமிக், மத்யமா போன்ற பரிட்சைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே விவாதம் வேண்டாம். அவருக்குச் சொன்னதுதானே உங்களுக்கும்?

6. கவன ஈர்ப்பு

(அ) அரசுப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள காலியிடப் பணிகளில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள் திருவாளர்கள் ஆர். சிங்காரம், சி. சுவாமிநாதன், இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஆர், சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரசுப் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள காலியிடப் பணிகளில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.